ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

न चेदयं मां दुरितैर्विकंपयेदहं यतेयं प्रशमाय नाधिकम् ।
अतोऽस्तिलाभोयमिति प्रतर्कयेत् विचाल्य रूढा हि भवन्ति निश्चला:॥

"இந்த மனுஷ்யன் என்மீது அபாண்டமாகப் பாபங்களைச் சுமத்தி
என்னைக் கிளப்பிவிடாமலிருப்பானேயானால் நான் பாபசமனத்திற்கு
அதிகமாகப் பிரயத்தினம் செய்யமாட்டேன், ஆகவே இல்லாததையும்
பொல்லாததையும் சொல்லி என்னைக் கிளப்பிவிட்டது பரம லாபமே
யாகும் என்று நினைக்கவேண்டும், அசைத்து அசைத்து ஊன்றினாற்
றானே அசைவற்று நிலைக்கும்" பிராணிகளுள் சாஸ்திரவாஸனையேறின
வர்கள் என்றும் சாந்தர்களாய் ஒரேநிலையிலிருப்பார்கள். மற்றவர்களோ
பரஸ்பரம் இல்லாத தோஷங்களையுங் கற்பனைசெய்து அதன் பரிகாரத்திற்
கும் பாடுபடட்டுமேயென்று கிளப்பிவிடுவார்கள். அந்தஸமயத்தில் அஸா
துக்கள் இப்படிச்சொல்லும்படியாயிற்றா! என்று ஆத்திரப்படுவார்கள்.
அதனால் ஒருபிரயோஜனமும் கிடைக்கமாட்டாது. உண்மையில் அந்தத்
தோஷம் தம்மிடம் ஸம்பவித்திருக்கலாமோ என்று தோன்றினால் அதன்
பரிஹாரத்தைத்தேடிப்பார்த்துச் செய்து பரிசுத்தியை அடையவேண்டு
வது அவசியமல்லவா! இப்படி இவர்கள் கிளப்பிவிடாவிட்டால் அந்தத்
தோஷபரிகாரத்திற்காக நாம் உடனே பிரயத்தினம் எடுத்துக்கொள்ள
மாட்டோம். இவர்கள் செய்தது பரோபகாரமாயிற்று. இப்படிக் கருணை
கொண்டவன் செய்ததுபோலல்லவா இருக்கிறது இது பரம லாபமல்
லவா! என்று நினைக்கவேண்டும். ஒரு ஸமயம் தம்மிடமில்லாத
தோஷங்களை வேண்டுமென்றே கற்பனைசெய்திருப்பார்களானால் அப்
பொழுதும் "இப்படி ஒருபாபவினை இருந்துதான் இந்த அபவாதத்தைக்
கேழ்க்கநேர்ந்தது என்று அந்தப் பாவவினையைப் பரிஹரிக்க முயல
வேண்டுமேயன்றி ஒன்றும் சொல்லக்கூடாது. அப்படியானால் இல்லாத
பாபத்தைக் கற்பனைசெய்துவிட்டவர்களுக்கு இரண்டுபங்கு பாபம் சும
ரும். நம் பாபமும் விலகும். அவஸரப்பட்டு ஆத்திரப்பட்டுவிட்டால்
ஒன்றுமில்லை. ஆனால் த்வேஷத்தினால் இல்லாததையும் பொல்லாத
தையும் கற்பிப்பவர்கள். "இவன் எப்படியாவது சுத்தனாகி சிரேயஸ்ஸை
அடையட்டு"மென்று கருணைகொண்டு கற்பிக்கவில்லை. ஆயினும் கருணை
கொண்டவர்கள் செய்ததுபோலவே ஆகிறபடியால் அதை உபகாரம்
என்றே நினைக்கவேண்டும். நிலைத்துநாட்ட முதலில் அசைத்து ஆட்டி
விடவேண்டியதுதான் உசிதம். கருணையோடு ஆட்டிவிட்டாலும் சரி
த்வேஷப்பட்டு ஆட்டிவிட்டாலும்ஸரி, நிலைத்து நிற்பதற்குக் காரணம்
தான். எப்படியாவது சாந்தநிலையிலிருந்து தோஷபரிகாரத்தைச் செய்து
சுத்தர்களாகுக.

சுபம்.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி ௵ பங்குனி ௴ ௨௰௨

வேதோபாகரணம்.

ஆர்ய குலத்துதித்த அந்தணர் மணிகள் இக்கலியிலும் ஆங்காங்கு கிராம கோணங்களில் வேதாத்யயனம் செய்து வருகிறார்கள். அந்த ஆரியவேத வித்யையே அழியாச் செல்வமென்றும், அதைப் பரம்பரையாய் பாதுகாத்துவரவேண்டியது பிராமணர்களின் கடமையென்றும் சாஸ்திரம் சொல்லுகிறது. அப்படி அவிச்சின்னபரம்பரையில் அத்தியயனம் செய்யப்பட்டுவரும் வேதம் வீர்யவத்தாக ஆகவேண்டியதற்காகவும், அயாதயாமமாயிருப்பதற்காகவும், பிரதி௵த்திலும் வேதோபாகரணம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதை அனுஸரித்து சிஷ்டாசாரமும் அனுதியாகவந்துகொண்டிருக்கிறது. அந்தந்த சாகைக்காரர்களும் குறிப்பிட்டகாலத்தில் உபாகர்மாவைச் செய்து வருகிறார்கள். ஆனால் அதில் தற்போது பெரிய விவாதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் பஞ்சாங்கங்கள் பற்பலவிதமாகத் தோன்றிவருவது ஒன்றாகும். தர்மசாஸ்திரபராமர்சம் செய்து வருபவர்கள் விசாரத்தைப் பலவிதமாகக் கிளப்பிவிடுவது மற்றொரு காரணமாகும். பஞ்சாங்க பேதத்தால் பேதம் வருவதற்கும் தர்மசாஸ்திர விசாரமே காரணம். வரப்போகிற அங்கிரஸ ௵த்தில் உபாகர்ம காலம் பஞ்சாங்கங்களில் பலவிதமாகப் போடப்பட்டிருக்கிறது. அதை அடுத்த பக்கத்தில் பார்க்கலாம். தர்மசாஸ்திர ஆராய்ச்சி செய்வதில் சென்ற ௵த்தில் விசாரம் முடிவடையாமலே அவரவர்களுக்குத் தோன்றியபடி செய்தார்கள். காயத்ரீ ஜபத்திலும் பெரிய விவாதம் நடந்தது. அடுத்த வருஷத்தில் சாஸ்திர சம்மதமான உபகர்மா காலமின்னது என்பதைத் தீர்மானித்து எழுதவேண்டுமென்று பலபேர்கள் கேட்டுக்கொண்டிருப்பதால் அதை இப்பொழுதே விசாரிக்கத் தொடங்கினோம். விசாரகர்கள் சாஸ்திர திருஷ்டிகளாகவே இருந்து சாந்த நிலையில் தூஷணவார்த்தைகளை உபயோகப்படுத்தாமல் கக்ஷிக்கு மேல் கக்ஷிசொல்ல சாஸ்திரம் இடங்கொடுத்தால் அதைமாத்திரம்

எழுத வேண்டுகிறோம். சென்ற வருஷத்திலேயே பாக்கி விசாரிக்கவேண்டியதாயுள்ள விஷயமிது. அந்த காலம்முதல் பல பேர்கள் பலவிதமாக எழுதியிருக்கிறார்கள். அவைகளையும் அந்தந்த கக்ஷிவரும்போது சேர்த்து அவரவர்கள் பெயராலேயே பிரசுரிக்கிறோம். ஆனால் அவைகளிலுள்ள தூஷணவார்த்தைகளை விலக்கி விஷயத்தை மாத்திரம் வெளியிடுகிறோம். இனிமேலும் எழுதுவார்களானாலும் தூஷணவார்த்தைசேராமல் எழுதவேண்டுகிறோம். உபாகர்ம விஷயத்தில் அநேக ஆசங்கைகள் இருக்கின்றன. அவைகளை அடுத்த தடவைகளில் வெளியிடுகிறோம். அதற்கு முறையே சமாதானம் எழுதவேண்டுகிறோம். கடைசியில் முடிவான ஸித்தாந்தமாய் எந்தக் காலம் வருகிறதோ அதிலேயே யாவரும் உபாகர்மத்தைச்செய்து வேத வித்யை வீர்யவத்தாக ஆகும்படி செய்வார்களாக. சுபம், பத்திராதிபர்.

ஸ்ரீ மத்ராமாயணபட்டாபிஷேகம்.

இவ்வூர் ஸ்ரீபவ ஔஷதீச்வரர் சன்னிதியில், ஸ்ரீமான் ஜி. தியாகராஜய்யர் கிரஹத்தில் சென்ற சிலமாதங்களாகச் சேங்காலிபுரம் பிர்ம்மஸ்ரீ அப்பாஸாமி சாஸ்திரிகளவர்களால் உபந்நியசிக்கப்பட்டுவந்த ஸ்ரீமத் வால்மீகி ராமாயணப் பிரவசனம் பூர்த்தியாகி 30-3-32 யன்று புதன்கிழமை ஸ்ரீராமச்சந்திர பட்டாபிஷேக மஹோத்ஸவ வைபவம் பூர்த்தியடைந்தது. பிரமஸ்ரீ சாஸ்திரிகளவர்களால் உபந்யஸித்துவந்த ராமாயணம் சங்கீதானுபவத்துடனும் நல்ல அர்த்த புஷ்டியுடனும் இருந்ததை மஹாஜனங்கள் கேட்டு ஆனந்தமடைந்தனர். பட்டாபிஷேக தினத்தன்று ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்களால் அனுக்ரஹித்து அனுப்பப்பட்ட சால்வையையும் அட்வகேட். ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணஸ்வாமிய்யரவர்கள் கிரஹத்திலிருந்து மேளவாத்யத்துடன் கொண்டுவந்து ராமாயணகிருஹத்திலிருந்த பக்தகோடிகளுக்கு முன்னிலையில் சாஸ்திரிகளவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. தவிர ஊரிலுள்ள பிரமுகர்களாலும் ஸன்மானம் செய்யப்பட்டது. பட்டாபிஷேக தினத்தன்று காலை சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீராமபடத்திற்கு பூஜைபடனம் செய்யப்பட்டதும் ஊரிலுள்ள சிலர்களின்நன்முயற்சியால் ஏராளமான பிராமணுளுக்கு சமாராதனைசெய்து வைக்கப்பட்டது.

T. K. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.
தெற்குவீதி திருத்துறைப்பூண்டி.

ஆங்கிரஸஸ்ரூத்திய ரிக்,யஜுர்உபாகர்மகால நிர்ணயம்.

ப்ராம்மண அபிமானிகளே!

தற்காலத்தில் ப்ராம்மணர்களில் சிலர் ஸந்த்யாவந்தனம் செய்கிறார்கள். சிலர் செய்வதாக பாவனை செய்கிறார்கள். சிலர் அதுவுமில்லை. செய்வதும் செய்யாததும் பிறருக்குத்தெரிய நியாயமில்லை. ஆனால் சிராத்தம், உபாகர்மா இவ்விரண்டையும் மட்டில் அனுஷ்டிக்கிறார்கள். இப்போது பஞ்சாங்கங்கள் புதிது புதிதாய் ஏற்பட்டிருக்கிறதிலிருந்து இவைகளுக்குங்கூட ஆபத்து வந்துவிட்டாப்போலிருக்கிறது.

திதி நிர்ணயம் சரியாகவும் ஒரே மாதிரியாகவும் பஞ்சாங்கக் காரர்கள் செய்யாத காரணத்தால் அண்ணன் தம்பிகள்கூட வெவ் வேறு ஊர்களிலிருப்பவர்கள் வெவ்வேறு பஞ்சாங்கங்களை யனுஷ் டித்து ஒரு தாய் தகப்பன் சிரார்த்தத்தை வெவ்வேறு நாட்களில் நடத்துகிறார்கள்.

இது நிற்க, சென்ற வருஷத்தில் யஜுர்வேதி உபாகர்மா வானது இரண்டு நாட்களில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த வரு ஷத்திலோ சாமவேதிகளின் உபாகர்மா நீங்கலாக மற்றவை எல்லாம் தட்டுக்கெடலாகக் காணப்படுகிறது, இது விஷயமாக பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கமுள்ள பேதங்களை தெளிவாய்க் காட்டி அடியில் குறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கம் கணிக்கி றவர்கள் தர்மசாஸ்திரத்தை ஒட்டித்தானே கணிக்கவேண்டும். ஆகையால் ஒவ்வொரு பஞ்சாங்க ஜோதிஷர்களும் திரும்பவும் ஆராய்ந்து பார்த்து பிடிவாதமில்லாமல் அவரவர்கள் பிரமாண மாகக்கொண்ட தர்மசாஸ்திர வசனங்களையெழுதி அடியில்கண்ட ஒவ்வொரு பஞ்சாங்கங்களிலும்கண்டபடி உபாகர்மாவையனுஷ் டிப்பதில் குணதோஷங்களை வியக்தமாய்க்கண்டு எந்தக்காலத்தில் தோஷக்குறைவு என்றும் அனுஷ்டிப்பது உசிதமென்றும் அவர வர்கள் சித்தாந்தத்திற்குள்ள ஆதாரங்களை அதிக காலதாமதமன் னியில் வெளியிடும்படி வணக்கமாய் ப்rார்த்திக்கிறேன்.

லக்கம்.	பஞ்சாங்கத்தின் பெயர்.	ரிக்உபா கர்மா,	யஜுர்உபா கர்மா	பாதாயன உபா கர்மா	ஹிரண்ய கேசிஉபா கர்மா	காத்யாயனி உபா கர்மா	ரிக்ம்வத்ஸர ப்ரதமோ கர்ம	தோஷங்கள் என்ன	எப்படி தோஷபரி ஹாரம்
1	கும்பகோணம் ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் மடம்	ஆவணி 28	ஆவணி 1 சங்க்ரமண தோஷம்	—	—	—	—	?	?
2	ஸ்ரீரங்கம்	ஆடி 31குருஅஸ்தனதோஷம்	ஷை	—	—	—	—	?	?
3	மருத்துவக்குடி	ஆடி 23	ஆடி 2	—	—	—	—	?	?
4	28நெ வாக்ய[illegible]	ஷை	ஷை	—	—	—	—	?	?
5	ஆனந்தபோதினி	ஆடி 31	ஆவணி 1	—	—	—	—	?	?
6	ஆற்காடு	ஷை	ஷை	—	—	—	—	?	?
7	ரகுநாதய்யர்	ஷை	ஆவணி 30 சந்த்ரகிரஹணம் அர்த்தராத்ரம்.	—	—	—	ஆவணி 28	?	?
8	பாலசுப்ரமண்ய சாஸ்திரிகள்	ஆடி 23	ஆவணி 1 அல்லது 30	ஆடி 2	ஆடி 23	ஆடி 22	—	?	?

தஞ்சாவூர்
பிரஜாபதி ஸ்ரீ பங்குனிமீ 17உ

க. லெ. லெக்ஷ்மணசாஸ்திரிகள் வக்கீல்,
தஞ்சை ப்ராம்மணர் ஸபை கார்யதர்சி.

பிராம்மணபாகங்கள் வேதங்களன்றோ?

பிராம்மண பாகங்கள் வேதங்கள் அல்லவென்கிற அபிப்பிராயத்திற்கு சில யுக்திகளையும் சில ப்ரமாணங்களையும் தயானந்தர் வெளியிடுகின்றார். அவைகளை இங்கு விசாரிப்போம்.

தயாநந்தர் தமது ரிக்வேதாதி பாஷ்யபூமிகை என்கிற புஸ்தகத்தில் சொல்வதாவது—

'न ब्राह्मणानां वेदसंज्ञा भवितुमर्हति कुतः पुराणेतिहाससंज्ञकत्वात् वेदव्याख्यानात् ऋषिभिरुक्तत्वात्, अनीश्वरोक्तत्वात्, कात्यायनभिन्नैः ऋषिभिर्वेदसंज्ञायामस्वीकृतत्वात्, मनुष्यबुद्धिरचितत्वाच्चेति ।

அதாவது—ப்ராம்மணபாகங்களுக்கு 'புராணம், இதிஹாஸம்' என்ற பெயர்கள் இருப்பதாலும், அவைகள் வேதத்திற்கு வ்யாக்யான ரூபமாக இருப்பதாலும் ரிஷிகளால் அவை சொல்லப்பட்டிருப்பதாலும், ஈசவரனில்லாதவர்களால் சொல்லப்பட்டிருப்பதாலும், காத்யாயனரைத் தவிர மற்ற ரிஷிகளால் ப்ராம்மண பாகங்கள் வேதங்கள் என்று ஒப்புக்கொள்ளப்படாததாலும், மனிதனுடைய புத்தியினால் செய்யப்பட்டதாலும் பிராம்மண பாகங்களுக்கு வேதம் என்றபெயர் தகுந்ததன்று என்று சொல்லுகிறார்.

மேற்கண்ட ஐந்தாறு காரணங்களைக்கொண்டு, வேதத்தின் ஒரு பாகமானப்ராம்மணபாகத்தைக்கல்பிதமென்று நிர்ணயிக்கிறார்.

இக்காரணங்களில் பெரும்பாலும், இவர் யுக்தி ஒன்றை மட்டுமே ப்ரமாணமாகக் கொள்கிறாரேயன்றி எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சாஸ்திரீய ப்ரமாணம் ஒன்றையும் காட்டவில்லை.

ப்ராம்மணபாகம் கல்பிதம் என்பதற்கு, இவர் சொல்லிய யுக்தி முதலியவை, மந்திரபாகங்களுக்கும்சொல்லக்கூடியவைகளே. ஆகவே, மந்திரபாகங்கள் அநாதியானவை என்கிற இவரது கக்ஷியும், அடிபட்டுப்போகக்கூடியதாக இருக்கிறது எவ்விஷயத்திலும், ப்ராசீன ப்ரமாணங்களைக்கொண்டே நிர்ணயம் செய்ய வேண்டுமென்கிற திருடமான கொள்கையுடைய வைதிக ஸமூகத்திற்கு ப்ராம்மண பாகங்களும் அநாதியான வேதங்கள்தான் என்கிற விஷயத்திற்கு நூற்றுக்கணக்கான மஹர்ஷிகளின் பிரமா

ணங்கள் ஸ்பஷ்டமாகக் கிடைக்கின்றன. அவ்வளவையும் உதாஸித்து தன் யுக்தி ஒன்றைமட்டுமே தயாநந்தர் தனது கக்ஷிக்கு ப்ரமாணமாகக் கொள்ளுகிறார். விசேஷ தபோமஹிமையால் அதீந்திரியமாயுள்ள விஷயங்களைக்கூட நிர்ணயிக்கும் சக்திவாய்ந்த ரிஷிகளுடைய ப்ரமாண வாக்யங்களைவிட்டு தயாநந்தருடைய யுக்தியைநாம் மதிக்கவேண்டியது அவச்யமில்லையாயினும் அந்த யுக்திகளும் தவறானவை என்பதை தடஸ்தர்களுக்கு நாம் விளக்குவோம்.

ப்ராம்மண பாகங்கள் இதிஹாஸம் அதாவது கதைகள் ரூபமாக பலவிடங்களில் காணப்படுவதால் அவைகல்பிதங்களென்று ஒரு யுக்தி சொல்லுகிறார்.

ப்ராம்மண பாகங்கள் முழுவதும் இதிஹாஸ ரூபமாக இருப்பதாகச் சொல்வது தவறு. 'செய், செய்யாதே' என விதி நிஷேதங்களும் ப்ராம்மணங்களிலேயே அடங்கி இருக்கின்றன. कर्मचोदना ब्राह्मणानि ஆகவே இவரது அபிப்பிராயப்படி सत्यं वद-धर्मञ्चर नानृतं वदेत् முதலிய விதி நிஷேதங்களும் ரிஷிகள் காலத்திலேயே ஏற்பட்டன எனச்சொல்லவேண்டிவரும் இதில் அவர் இஷ்டாபத்தி பண்ணினால் ஸத்யம் பேசுதல் முதலானவை வைதிகங்கள் அல்லவென்று முடியும். தவிர ப்ராம்மண பாகங்களில் இதிஹாஸங்கள் இருப்பதுபோல் பல மந்திரங்களிலும் இதிஹாஸங்கள் அமைந்து இருப்பதை இவர் மறுக்க முடியாது. ஆகவே மந்திரங்களையும் இவர் வேதம் அல்லவென்றே சொல்லவேண்டிவரும். உதாஹரணமாக இந்த இரண்டொரு மந்திரங்களைக் குறிப்பிடுவோம்.

ऋग्वे— कन्या वा वारयती सोममपि स्रुता विदत्।
अस्तं भरन्त्यब्रवीत् इन्द्राय सूनवै त्वा .शुक्राय .सूनवै त्वा ॥
असौ यएषि वीरकः ग्रहंग्रहं विचाकशत् ।
इमं जम्भुमन्तं विबभ्रानाबन्तं करंभिणम पूपवन्त मुक्थिनम् ॥
आचन त्वा विचिकित्सामः अधि चनत्वा नेमसि ।
शनै रिवशनकै रिन्द्रायेन्दो परि स्रव ॥
कुवि च्छकर्म कुवित् करत् कुवित्नो वस्यसः करत् ।
कुवित्पति द्विषो यती रिन्द्रेण सङ्गमामहै ॥

इमानि त्रीणि विष्टपा तानीन्द्र वि रोहय ।
शिरस्ततस्यो र्वरामादिन्द्रम उपोदरे ॥
असौ चयानउर्वराउदिमं तन्वं मम। अथो ततस्य यच्छिरः सर्वा ता
रोमशा कृधि ॥

खे रथस्य खेनसः खे युगस्य शतक्रतो ।
अपाला मिन्द्रत्रिष्पूत्वकृणो स्सूर्य त्वचम् ॥

இங்கு சொல்லப்படும் கதையாவது— நதியிலிருந்து வீடு சென்றுகொண்டிருந்த அபாலை என்றபெண் வழியில் ஸோமனைக் கண்டாள். ஸோமனைப் பார்த்து இந்திரனைக்குறித்து உன்னை அபிஷவம் செய்யப்போகிறேன் என்றுசொல்லி ஸோமலதையைக் கடித்தாள். உடனே இந்திரன் ஓடிவந்தான். அவனைக் கண்டதும் அபாலை, இந்திரனே! எனது பல்லால்கடிக்கப்பட்ட ஸோமனை பானம்பண்ணு என்றாள். உன்னை நன்கு அறிய ஆவல்கொள்கிறேன். நடுவழியில் கண்ட உன்னை நன்றாக அறியமுடியவில்லை. ஸோமனே! இந்திரனைக்குறித்துப் பெருகு. இந்திரன் உன்னைப் பானம்பண்ணிவிட்டு நம்மை மிகவும் ஸமர்த்தர்களாகச் செய்யட்டும். இந்திரனுடன் நாம் சேரவேண்டும் என்றும் சொன்னாள். உடனே இந்திரன்பானம்பண்ண ஆரம்பிக்கையில் அபாலை தனக்கு வேண்டிய மூன்று வரங்களைக் கேட்டாள். இந்திரன் அவைகளைக் கொடுத்தான். பிறகு ரதம், சக்கிரம், நுகத்தடி, இவைகளிலுள்ள துவாரங்கள்வழியாக அபாலையை இழுத்து ஸூர்யனைப்போன்ற சரீரத்தையுடையவளாகச்செய்தான்.

हये जाये मनसा तिष्ठ घोरे वचांसि मिश्रा कृणवा वहैतु ।
ननौ मन्त्रो अनुदितास एते मयस्करन् पतरे चनाहात् ॥

किमेता वाचः कृणवा तवाहं प्राक्रमिष मुषसा मग्रियेव ।
पुरूरवः पुन रस्तं परेहि दुरापना वात इवाहं मस्मि ॥

இளனுடைய பிள்ளையான புரூரவஸ் என்ற அரசன் ஊர்வசீ என்ற அப்ஸரஸுடன் சிலகாலம் இருந்தான். சிறிதுகாலத்தில் உர்வசீ அவனைவிட்டுப் பிரிந்தாள். ஒருநாள் மானஸ ஸரஸ்ஸின் கரையில் உர்வசீ புரூரவஸ் இருவருக்கும் ஸந்திப்பு நேர்ந்தது. இந்தமந்திரங்களிருவருக்குப் நடந்த பேச்சைச் சொல்லுகின்றன.

புரூரவஸ்—குரூரஸ்வபாவமுள்ள பார்யையே! நல்ல புத்தியுடன் சிறிது நில்லு, சிறிது பரஸ்பரம் பேசிக்கொள்வோம். பரஸ்பரம் பேசிக்கொள்ளாவிடில் நமது ரஹஸ்யங்கள் வெகு நாள் கழித்தும் ஸுகத்தைக் கொடுக்கா.

உர்வசி—புரூரவஸ்ஸே! வீண்பேச்சை ஏன் பேசவேண்டும். நான் உன்னைவிட்டுப் பிரிந்துவிட்டேன். நான் உனக்கு அகப்படக்கூடியவளன்று, வீட்டிற்குப்போ.

त्वा मग्ने पुष्करं दध्यथर्वा निरमन्थत मूर्ध्नो विश्वस्य वाघत: ॥
तमु त्वा दध्यङ् ऋषि: पुत्र ईधेअथर्वण: ॥

அக்நியே! உன்னை ஸ்ருஷ்டியின் ஆதியில் இருந்த தாமரை இலையில் அதர்வாவென்பவர் மதனம் செய்தார். பிறகு உன்னை அவரது பிள்ளையான தத்யங் என்பவர் விருத்தி செய்தார்.

இந்த மந்திரங்களில் இதிஹாஸங்களுள்ளதை யாரும் மறுக்க முடியாது. தயானந்தர் இங்கு என்ன சொல்வார்? இதுபோன்ற கதைகள்புராணங்களிலும் ஸுப்ரஸித்தமானவைகளே; இக்கதைகள்மந்திரபாகங்களில் இருப்பதைக்கொண்டு இவைகளை வேதமென்று தயானந்தர் முடிவுகூற ஸம்மதிப்பாரோ.

ஆகவே ப்ராம்மணங்களில் இதிஹாஸங்கள் இருப்பதால் அவைகள் வேதங்களன்று என்று கூறமுடியாது.

ராமானுஜதாதாசாரியர்.

ஸமுத்திரத்தின் பெருமை.

अन्यार्थं कियतीरुवाह महती मन्थाद्रिमर्मव्यथा
मर्यादामतिवर्तते न कतिभि र्वात्याभिरत्याकुल: ।
कुक्षौ क्षोणिभृतो बिभर्ति पयसा पुष्णातिलोकत्रयं
तेनैवांबुनिधेर्महत्वमाधिकं वर्वर्ति सर्वोत्तमम् ॥

அமிருதம் அடையவேண்டித் தேவாஸுரர்கள் பூர்வகாலத்தில் மந்தரகிரியை மத்தாகவும் வாஸுகியை நாணாகவும் கட்டித்

திருப்பார்க்கடலில் போட்டுப் பரபரவென்று சுற்றி இழுக்கும் காலத்தில் திமி திமிங்கிலம், முதலை மகாமீன் நீர்மனிதன் நீர்யானை நீர்க்குதிரை நீர்நாய் நீர்ப்பாம்பு முதலிய ஸமுத்திர வாஸிகளான பல ஜந்துக்கள் திக்குத்தெரியாமல் தட்டுக்கெட்டு ஓடவும், அடியில் தங்கியிருக்கும் ரத்தினங்களெல்லாம் சிந்திச் சிதருண்டுபோகவும், ஜலம் ஒரே கலக்கத்தையடையவும், ஏற்பட்டதாயுள்ள வேதனையைப் பொருத்துக்கொண்டது.

பிரமாதமான காற்றினுல் எவ்வளவு அலைகள் உண்டான போதிலும், எல்லை தப்புகிறதில்லை. பெரும் பர்வதங்களை வயற்றில் வைத்துக்கொண்டிருக்கிறது. மூவுலகங்களுக்கும் சூர்ய வெப்பத்தாலும், அக்னியாலும், காற்றினுலும் உண்டாகக்கூடிய தாபத்தைத் தன்னுடைய குளிர்ந்த ஜலத் திவிலைகளைக் காற்றின் மூலம் பரவச்செய்து மூவுலகத் தாபத்தையும் சமனப்படுத்திப் புஷ்டியைத் தருகிறது.

இவைகளால் ஸமுத்திரத்தின் பெருமை மிகவும் அதிகம், பரோபகாரமே மஹான்களுடைய குணம். பரோபகாரார்த்தம் எவ்வளவு சிரமம் வந்தாலும் ஸஹித்துக்கொள்ளுவரர்கள்.

पीयूषेण सुराश्श्रिया मुररिपुः मर्यादया मेदिनी -
इन्द्रः कल्परुहैः शशांकलया श्रीशङ्करस्तोषितः ।
मैनाकादिनगा निजोदरगताः यत्नेन संरक्षिताः
मच्चूलीकरणे घटोद्भवमुनिः केनापि नो वारितः ॥

அமிருத மதனம் செய்தகாலத்தில் உண்டான அமிருதத்தால் முப்பத்திமூன்றுகோடி தேவகணங்களும், ஸ்ரீலக்ஷ்மிதேவியை அடைந்ததால் முராரியும், தன்னைச் சுற்றி எல்லைபோல் வளைத்துக்கொண்டிருப்பதால் பூமியும், மந்தாரபாரிஜாதாதி கல்பவிருக்ஷங்களை அடைந்ததால் இந்திரனும், சந்திரகலையைப் பெற்றதால் ஸ்ரீசங்கரனும் ஸந்தோஷத்தையடைந்தார்கள். முன் இந்திரன் பர்வதங்களுடைய சிறகுகளைச் சேதிக்கும்போது மைனுகாதி பர்வதங்கள் சரணமடைய அவைகளை மிகவும் பிரயத்தினப்பட்டுத் தன் குக்ஷியில்வைத்துக் காத்தது. இவ்வளவு உபகாரங்களை இவர்களெல்லாம் பெற்றும் தேவகார்யார்த்தமாய்க் கும்பமுனி ஸமுத்திரத்தை ஆசமநீயம்செய்யும்போது ஒருவரும்தடுக்கவில்லை,

ஸமுத்திரமும் முனியின் தபஸுக்கு மெச்சி முனியின் பிரபாவத்தை வெளியாக்குவதற்குக் கட்டுப்பட்டிருந்தது. பரோபகார சீலமுள்ளவர்கள் தன்சொத்துக்களையும் சரீரத்தையும் பெரிதாக நினைக்கமாட்டார்கள். கீர்த்தியேதான் அவர்களின் பெருமை.

गां विदता भगवता गोविन्देनामितौजसा ।
वराहरूपिणा चान्त विक्षोभितजलाविलम् ॥

பாரதம்.

முன் ஒரு அசுரனால் பூமி பாதாள லோகத்திற்கு சுருட்டிக் கொண்டு போகப்பட்டபோது அதை அடையவேண்டி ஸ்ரீபகவான் நாராயணன் வாராஹாவதாரமெடுத்து ஜலத்தில் மூழ்கி நாலு பக்கத்திலும் சுத்தித்தேடி அசுரனை வென்று பூமியை தன் கொம்பின் நுனியால் உத்தாரணம் பண்ணினார். அவர் சரீரம் சமுத்திர ஜலம் முழுவதிலும் ஸம்பந்தப்பட்டதால் ஸமுத்திர ஸ்நானத்திற்கு மஹிமை வந்தது. 'காம்விந்ததா' என்றதால்பகவானுக்கு கோவிந்தனென்ற பெயரும் வந்தது.

वैदेहि पश्यमलयात्द्विविधाविभक्तं मत्सेतुना फेनिलमंबुराशिम् ।

ரகுவம்சம்.

ஸ்ரீராமன் ராவண வதம்செய்து ஸ்ரீ ஸீதாஸமேதராக புஷ்பகமேரி வரும்போது, ஹே வைதேஹி! பார்த்தையா என்னுடைய ஸேதுவால் மலயபர்வதத்திலிருந்து இரண்டாய் பிரிக்கப்பட்ட நுரைகளுடன் கூடின ஸமுத்திரத்தை—என்றார். இதனால் பகவதவதார ஸ்ரீராமாக்ஞையை முன்னிட்டு முப்பத்தி மூன்றுகோடி தேவகணங்களின் ரூபாந்தரங்களான வானர மூர்த்திகளால் கட்டப்பட்டதால் ஸேதுவுக்கு விசேஷம் வந்தது. ஸ்ரீராமஸேதுவை தர்சித்தாலேயே பிரம்மஹத்யாதி பாதகங்கள் போகின்றன.

सेतुं दृष्ट्वा समुद्रस्य गङ्गासागरसङ्गमम् ।
ब्रह्महत्या प्रमुच्येत मित्रद्रोहं नमुच्यते ॥

ஸமுத்ரத்தினுடைய ராமஸேதுவையும், கெங்காஸாகர ஸங்கத்தையும் கண்ணாலே கண்டாலேயே பிரம்மஹத்யாதி பாதகங்கள் நீங்கும். மித்திர துரோகத்திற்கு எந்த தீர்த்தங்களிலும் நிவர்த்தியில்லை. ஸகர குமாரர்கள் வெட்டி விருத்தி செய்ததால் ஸாகர

மென்றும், ரத்னங்களுக்கு உற்பத்தி ஸ்தானமானதால் ரத்னாகர மென்றும், பூமிக்கு நாலு பக்கங்களிலுமிருப்பதால் சதுஸ்ஸாகர மென்றும், அதே ஜலம் ஸ்தலபேதத்தால் ருசிபேதத்தையடைந் ததால் ஸப்த ஸமுத்ரமென்றும் பல பெயர்களை உடையது.

(கங்காநதியின் பெருமை)

நதிகள் இரண்டுவிதம், ஜீவநதிகளென்றும், அஜீவநதிகளென் றும் இருவகைப்படும். அவைகளிலும் கிழக்கு நோக்கி செல்லு பவைகள் நதிகளென்றும், மேற்கு நோக்கிச்செல்லுகிறவைகள் நதங்களென்னும் இருவகையுண்டு.

षट्षष्टिकोटितीर्थानि द्विसप्तभुवनेषु च ।

பதினாலு லோகங்களிலேயும் அறுபத்திஆறுகோடி தீர்த்தங்களுள் ளதாய் பெரியோர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். அவைகளுள் ஜம்பூத்வீப நதிகளுக்கும், தீர்த்தங்களுக்கும் அதிக விசேஷம் உண்டு. எல்லா தீர்த்தங்களுக்கும் பாபத்தைப் போக்கும் தன் மையுண்டு என்றும், அதிலும் கெங்கைக்கு அதிக மகிமை கூறு கிறார்கள். இதைக்காட்டிலும் உலகத்தில் நீண்டதாயும் அகல முள்ளதாயும் அநேகம் நதிகள் இருந்தாலும், இது தேவலோகத் திலிருந்து பூமிக்கு வந்ததால் இதற்கு மகிமை அதிகம் உண் டாயிற்று.

इयं हैमवती गङ्गाज्येष्ठा हिमवतः सुता । स्रोतसामस्मि जान्हवी ।
कदा वारणस्यां अमरतटिनीरोधसि वसन् ।
विष्णोस्सङ्गतिकारिणी हरजटाजूटाटवीचारिणी
प्रायश्चित्तनिवारिणी जलकणैः पण्यौघविस्तारिणी
भूभृत्कंधरधारिणी निजजले मज्जज्जनोत्तारिणी
श्रेयस्स्वर्गविहारिणी विजयते गङ्गामनोहारिणी॥

காளிதாஸன்.

ब्रह्माण्डं खण्डयन्ती हरशिरसि जटावल्लिमुल्लासयन्ती ।
गङ्गाजललवकणिकापीता ॥ दृढभक्तः ॥
सुरस्रोतस्विन्याः पुलिनमधि तिष्ठन्नयनयोः ।
निधायान्तर्मुद्रा मथ सपदि विद्राव्य विषयान् ॥

गंगातरङ्गकमनीयजटाकलापम् । गङ्गाष्टकम् ।
याकर्णिताऽभिलषिता उक्ता स्पृष्टा च पावनी भवति ।
दृष्टास्तुता स्मृतावा पुनाति बहुधापि पापिनः पुरुषान् ॥
यां चलिते दलिताखिलबन्धो गच्छति वलगतिततपितृसंघः ।
प्राप्ततटे विजितांतकदूतोयाति नरेनिरयात्सुरलोकम् ॥

இப்படி சுருதிஸ்மிருதி புராணுதிகளால் பெருமை வாய்ந்த கெங்கா நதிஸ்நாநத்தாலும் பானத்தாலும் லோகத்திற்கே க்ஷேமத்தைத் தருகிறது

கெங்கையைக் காதினல் கேட்டாலும், ஆசைப்பட்டாலும், வாயால் உச்சரித்தாலும், கைகளால்ஸ்பர்சித்தாலும் பரிசுத்தி யைச்செய்கிறதாக ஆகிறது.

கண்ணால்கண்டாலும், நினைத்தாலும், துதித்தாலும், எப் பேர்க்கொத்த பாபிகளையும் புனிதர்களாக்குகிறது. யாதொருவன் கெங்கைக்குப் போகிறேனென்று அடி எடுத்துவைத்தால் அவ னுடைய பிதிர்க்கள் எல்லாபந்தத்தினின்றும் விடுபட்டவர்களாய் புண்யலோகங்களை அடைகிறார்கள். ஸந்தோஷிக்கிறார்கள். கெங் கைக் கரையை அடைந்துவிட்டானேயானல் யமயாதனை நீங்கின வர்களாய் ஸுரலோகத்தைச் சேருகிறார்கள்.

त्रिरात्रं जान्हवीतीरे—
गङ्गेगङ्गेतियोब्रूयात्योजनानां शतैरपि ॥

இந்த கெங்கையைத்தான் பூலோகத்திற்குக் கொண்டுவர பகீரத மஹாராஜன் தவம்புரிந்து பிரம்மா அனுக்கிரகித்துச் சொல்லுகிறார்.

इयं हैमवती गङ्गा ज्येष्ठा हिमवतः सुता ।
तां वै धारयितुं शक्तोहरस्तत्र नियुज्यताम् ॥

ஹே பகீரதா! இந்த ஹிமவானுடைய புத்திரி ஜ்யேஷ்ட குமாரி ஹைமவதீசுவர்க்கலோகத்திலுள்ளவளிவள் பூலோகத்திற்குவருவ தாயிருந்தால் பரமசிவனைத்தவிரவேறுஒருவராலும் தாங்குவதற்கு முடியாது அவரை நன்மைசெய்துகொள்ளு என்றார். பிறகு பகீரதன் தபஸிலிருந்து ஈசுவரானுக்கிரகம்பெற்று பூலோகத்திற்குச்

சுவர்க்கலோகத்திலிருந்து கொண்டுவந்தான். இதனுல் பாகீரதீ என்று பெயர்வந்தது. ஸ்ரீராமாயணம்

இந்தக் கெங்கைக்கு உத்பத்திமுதல் ஸமுத்திர ஸங்கமம் வரை ஸ்நானபானத்தால் மேன்மையுண்டு. ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் விசேஷ மேன்மையுண்டு.

काशी धन्यतमा विमुक्तनगरी सालंकृतागङ्गया तत्रेयं मणिकर्णिको-त्तमतमा यत्रेश्वरोमुक्तिदः ॥

புண்ய க்ஷேத்ரங்களுக்குள் ஸ்ரீகாசி ரொம்ப உத்தமமானது. கெங்கையால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் அஸீ வருணு என்று சொல்லும்படியான அறுபத்திநான்கு கெட்டத்திற்குள் மணிகர்ணி கெட்டம் ஸ்நாநத்திற்கு உத்தமோத்தமம், அந்த கெட்டத்தில் ஸ்நாநம்செய்கிறவர்களுக்கு முக்தியை ஈசுவான் கையில்வைத்துக் காத்துக்கொண்டிருக்கிருர்.

அதிலேயும் மத்தியானஸ்னானம் மிகவும் நன்மை.

मध्यान्हेमणिकर्णिका स्नपनजंपुण्यंनवक्तुं क्षमम् ।

பூர்வம் ஹரிச்சந்திர மஹாராஜன் தன் ராஜ்யம் முழுவதையும் விசுவாமித்ர முனிக்குத் தாரைவார்த்துதந்துதான் அந்த பூமியில் வாஸம்செய்தால் தத்தாபஹார தோஷம் வருமென்று நினைத்து ஸ்ரீகாசி நகர் போய்ச்சேர்ந்தார், கைலாஸம்வந்து தன்னை தரிசிக்க முடியாதவர்களுக்காக ஈசுவான் காசியை பூமி சம்பந்தமில்லாமல் தன் சூலத்தில் தாங்கி இருப்பதாகச் சொல்லுகிருர்கள். அதனுல் தான் தானம்கொடுத்த பூமியல்லவென்று நினைத்து காசிக்குவந்து வாஸம் செய்தார். காசிக்கு விமுக்த நகரம் என்று பெயர் உண்டு. ஸ்ரீ மதப்பய்ய தீக்ஷிதாவர்கள் பிரம்மதர்க்க ஸ்தவத்தில் கெங்கையைப்பற்றி எழுதியிருக்கிருர்கள்.

गङ्गापिनैवभवताकरिचर्मधारिन् मूर्ध्नां धृता मधुरिपोश्चरणात्क्षरन्ती ।
किं तुप्रसादनपरायभगीरथाय दत्वा वरं शतधृतेस्सदनात्पतन्ती ॥

ஹே யானையுரிபோத்தினவனே! ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் திரிவிக்கிரமாவதாரம் செய்த காலத்தில் பிரம்மா விஷ்ணுவின் பாதத்தை அலம்பினர். அந்த தீர்த்தம் தங்களால் சிரஸால் தரிக்கப்படவில்லை. ஆனுல் பகீரத மஹாராஜன்செய்த தபஸுக்கு மெச்சி

அவர் மனப்படி வரம்தந்து தேவலோகத்திலிருந்து வந்ததான கங்கை தரிக்கப்பட்டது

பரமசிவ மூர்த்தி பேதங்களில் கெங்காதர மூர்த்தியை தியானிக்கும்போது பகவான் சிரஸிலிருப்பது இதுவோ அதுவோ வென்று சந்தேகம் ஜனிக்காதிருக்க ஈசுவரன் சிரஸிலிருப்பது ஹிமவத்ஜ்யேஷ்ட குமாரி ஸுரலோகவிஹாரிணீ கெங்கைதான் என்று இந்த சுலோகத்தால் ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் தெரிவிக்கிறார்கள். இதை பெரியோர்களிடம் கேட்டிருக்கிறேன். அதை எழுதினேன். ஈசுவரனே கெங்கையை சிரஸில் தரிக்கிறார் என்றால் அதன் மகிமை அதிகந்தான். இப்படி கெங்கையின் மகிமை தெரிந்தவரை எழுதிருக்கிறது. மேல் ஜலதர்மத்தின் விசேஷம் வரும்.

வெங்கடேசன்.

ஸ்ரீமத் பாகவத படனப்ரவசனோத்ஸவம்

சென்ற பிரஜோத்பத்திஸு மாசிமீ 23உமுதல் பங்குனிமீ 8ம்-உ முடிய ஒரு பக்ஷமாகப் புதுக்கோட்டை டவுன் பழய சந்தப்பேட்டை ஆஸ்திகமஹா ஜனங்களால்ஏற்பாடுசெய்யப்பட்டு மன்னார்குடி பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்முகமாகத் தினசரி காலே 7-மணிக்குமேல் ஸ்ரீமத்பாகவத படனமும் மாலே 8-மணிக்கு மேல் பிரவசனமும் மிகவும் பரிஷ்காரமாக ஸ்ரீமத் பாகவத படன பிரவசனோத்ஸவம் நடத்தப்பட்டது. மாலே ப்ரவசனத்திற்குத் தினசரி ச்ரவணம்செய்யவந்த ஆஸ்திகர்களுக்குக் கணக்கேயில்லே. ஸ்ரீவைகுண்டநாதனை ஸ்ரீய:பதியின் லீலாவிசேஷங்கள் மிகவும் அத்புதமாகவும் பக்தியை உண்டுபண்ணும்படியாகவும் ஸ்ரீசாஸ்திரிகளவர்கள் ப்ரவசனம் செய்தார்கள். கடைசி தினத்தில் ஏற்கனவே மூன்று நாட்களாக உஞ்சவிர்த்திவாங்கிச் சேகரித்துவைத்திருந்த தண்டுலத்தைக்கொண்டு மிகவும் விரிவாகவும் விமரிசையாகவும் நூற்றுக்கணக்கான பிராம்மணர்களுக்குப் போஜனம் அளிக்கப்பட்டது. ஷை தினத்தில் மாலேயில் கதை முடிந்தவுடன் கூடியிருந்த ஆஸ்திகர்கள் அனைவரும் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீபகவானின் அனந்தமான குணங்களை அத்புத

மாகவும் பக்தியுடனும் ப்ரவசனம் செய்யப்பட்டதையும் ஸ்ரீபக வானின் லீலாவிசேஷங்கள் அநேக ரஸங்களுடன் சொல்லப்பட்ட தையும் கொண்டாடி ஆனந்தபரவசமானார்கள்.

இவ்விதமாக ஷ்டி ஸ்ரீமத் பாகவத படனப்பிர வசனோத் ஸவம் வெகு சிரத்தையுடனும், பக்தியுடனும், ஒருபட்சத்தில் நடந்தேறியது. இந்தவிதமாக அடிக்கடி ஸ்ரீபகவானின் அருமை யான பெருமைகளைப் பக்தியுடன் ச்ரவணம்செய்து நாம் வரவே ணுமாய் ஸ்ரீபரமேசுவரன் கருணைபுரியுமாறு நாம் சதாகாலம் பிரார்த்திக்கிறோம்.

சுபமஸ்து.

T. ராஜகோபாலய்யர்,
வக்கீல் புதுக்கோட்டை.

ஈசாவாஸ்யத்வைத பாஷ்ய விசாரம்.

முதலாவது பாகத்தில் முதலாவது மந்திரார்த்தத்தை விமர் சித்தோம். இப்போது இவ்வுபனிஷதம் முழுமையுமே விசாரித்து ஸம்க்ஷேபமாய் வெளியிடுகிறேன். ஆனந்த தீர்த்தாசாரியாள் ஒரு மந்திரத்திற்காவது, ஒழுங்கானபடி, அர்த்தம் கூறவே இல்லை. அவதாரிகை அணுவளவுங் கிடையாது. பதார்த்த வாக்கியார்த்தங்களும், பரிஹஸிக்கத் தக்கனவையே. பதங் களுக்கு வ்யுத்பத்தி செய்வதோ, பாணிநி பதஞ்சலி, முதலிய மஹரிஷிகளால் அங்கீகரிக்கப் படாததே. அவர் எடுத்துகாட்டிய பிரமாணமோ? அவருக்கும், அவர் மூலமாக அவர் சீடர்களுக்குத் தான் தெரியும்,

இதற்கு எப்படி "பாஷ்யம்" என்று பெயர் வந்ததோ தெரியவில்லை. பாஷ்ய லக்ஷணம் ஒன்றுமே, காணவில்லையே? இதுவும் இதுவரையில் இவ்வுலகில், ஜீவித்து வருவதற்கு காரணந் தெரியவில்லை. இதிலும், ஜனங்களுக்கு விருப்பமுண்டாயிற்றே? அது ஆச்சரியந்தான். பூர்ணசந்திரனுதயகிரியில் உதித்து இருக் குங்காலத்தில், அந்தகாரத்தில், யாருக்காவது விருப்பமேற் படு வதுண்டா? அந்தகாரத்தாலேதாவது ஸுகமேற்படுமா? ஏற்படு

மென்று நினைப்பதுதான் விவேகமாகுமா? அதனால், அளவற்ற, அனர்த்த பரம்பரைதான் விளையும். ஆகையால் ஆனந்ததீர்த்தா சாரியாளின் அனர்த்த பாஷ்யத்திலுள்ள ஊழல்களை சிலவிடங் களில் எடுத்துக்காட்ட முன் வருகிறேன். அதனைக்கண்டு பிரிய வாசகர்கள் என்னிடம் கோபங்கொள்ளாமல் அந்த பாஷ்யத்தில், தமக்குள்ள அபிப்பிராயத்தை அகற்றிக்கொள்ள வேண்டுமாறு விரும்புகிறேன். உண்மையை ஒளித்துவிடமுடியுமா?

முதலில் இரண்டாவது மந்திரத்தின் த்வைத பாஷ்யத்தைக் கொஞ்சம் கவனிக்கவும்.

"அக்ஞானிகளைப்போல், தத்துவக்ஞானிகளாகிய பகவத் பக்தர்களுங்கூட வைதிக கர்மாக்களை அவசியம் செய்தே தீர வேண்டும். இன்றேல் அவர்களையும், அக்ஞானிகளைப்போல் பாபம் சூழ்ந்துவிடும். அதனால் கிருஷ்ண பக்தர்களுக்கு மோக்ஷானந்தம் குறைந்துவிடும்" என்று இரண்டாவது மந்தி ரார்த்தமாம்.

இம்மந்திரத்தில் பக்தர்களைப்பற்றிய பதமொன்றுவது இல்லை. जिजीविषेत् என்று உலகவாழ்வில் ஆசையுள்ள அக்ஞானிகளுக்கு மட்டுந்தான் கர்ம யோகத்தை விதிக்கின்றது. மூலத்தில் உள்ள பதங்களை அனுஸரித்தல்லவா, தாத்பரியமாவது கூறல்வேண்டும். மூல விருத்தமாகக் கூறுவது எப்படி நியாயமாகும்.

நிற்க அக்ஞானிகளாகிய உபாஸகர்களுக்கே சுருதிஸ்மிருதி களில் கர்மயோகம் நிஷேதிக்கப்பட்டிருக்கும்போது புருஷோத் தமனுடைய பரமபாவந ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்த உபாஸ கர்களுக்கு கர்ம யோகானுஷ்டானம் எப்படி ஏற்படக்கூடும்? பாபகர்மந்தான் அவர்களிடம் எப்படி ஸம்பந்திக்கும்? பாப கர்மாவில் பிரவிருத்தியுள்ளவன் பக்தனுவானு? அப்படிப்பட்ட பக்தன் பத்தனே யொழிய முக்தனுகான். இதனுல், "பக்தர் பலவிதம் பக்தர்களும் பாபத்தில் பிரவிருத்திக்கக்கூடும். ஆனுல் அவர்களுக்கு முக்தியுமுண்டு. எல்லா பக்தர்களுக்கும் முக்தி என்பது ஒரே மாதிரியில்லை. பாபமற்ற பக்தர்களுக்கு, மோக்ஷானந்தம் கொஞ்சமதிகந்தான். பாபிகளாகிய பக்தர் களுக்கு, பாபகர்மப் பிரவிருத்தியால்மோக்ஷானந்தம் குறையும்

தான்.'' என்ற மத்வமத ஸித்தாந்தம் நிஷ்பிரமாணமென்று ஸித்தம்.

अपिचेत्सुदुराचारो, भजतेमामनन्यभाक् ।
साधुरेवसमन्तन्य: सम्यग्व्यवसितोहिस: ॥
क्षिप्रंभवतिधर्मात्मा शश्वच्छांतिं निगच्छति ।
कौन्तेयप्रतिजानीहि नमेभक्त: प्रणश्यति ॥

என்ற இந்த ஸ்ரீ பகவத்கீதாவாக்கியம் ஒன்று ''பகவத்பக்தர்களுக்குப் பாபம் ஸம்பவிக்குமென்ற'' மாத்வஸித்தாந்தத்தை வேரறுப்பதற்குப் போதாதா? தவிர மோக்ஷானந்தத்தில் அதிகமும் குறைவும் ஒப்புக்கொள்வது ஸரியில்லை. மோக்ஷானந்தமானது முக்தானைவருக்கும் ஸமானமென்ற விஷயம் எல்லா மதவாதிகளாலும் அங்கீகரிக்கப்பட்டதல்லவா? இவர்கள் மட்டிலும் அதில் பேதத்தை ஏன் ஒப்பவேண்டும். அதன் பிரமாணத்துக்காகவும் ஏனிங்குமங்குமோடி அலையவேண்டும். மோக்ஷத்தை ஒரே விதமென்று ஸ்பஷ்டமாய் அறிவிக்கும் சுருதி ஸ்மிருதி, பிரும்மஸூத்திரம் முதலிய பிரமாணங்களுக்கும், அத்யாஹாரம் முதலியவற்றால் ஏன் அர்த்தபேதங்கற்பிக்கவேண்டும். ராஜவழியிருக்குங்கால், கோணல்வழியில்ச்சென்றால் மதிஹீநமாகுமன்றோ? ஆகையால் பக்தனுக்குப் பாபம் உண்டென்பதும், முக்தியில் பேதம் இருக்கிறதென்பதும் ஸரியல்ல.

3-வது மந்திரத்தில் असुर्या: என்றபதத்திற்கு

सुष्टु रमणविरुद्धत्वात असुराणां प्राप्यत्वाच्च असुर्या:।

என்று மத்வாச்சாரியாளுடைய வ்யுத்பத்தி வர்ணனம் வையாகாரண ஸம்மதமாகாததே. அப்படியே आत्महन: என்பதற்கும் ஸ்ரீமத் நாராயண பக்தியில்லாதவர்களென்று அர்த்தங் கூறுவதில் மாத்வமதத்தில் சிரமம் அதிகமுண்டு. ''அனாத்மக்ஞர்கள்'' என்ற அர்த்தத்தை சிரமப்படாமல் அங்கீகரிக்கலாகாதோ? येकेच என்ற பதத்திற்கும் நியமமாக (கட்டாயமாக) என்று அர்த்தஞ் சொல்லியதனை प्रविशन्ति என்ற வினையோடு அன்வயம் செய்வது வெகு விநோதம்.

(தொடரும்)

அத்வைதாபிமானி.

மனுஸ்மிருதி அத்தியாயம். 2

சில வசனங்கள்.

1. வ்யாகரணம் முதலிய வேதாங்கங்கள் படிப்பதிலும், காயத்ரீ, பிரம்மயக்ஞம், அக்கிஹோத்ரம் முதலிய நித்யகர்ம வேத மந்திரங்களை ஜபிப்பதிலும் அநத்யயனம் (படிக்கத்தகாத) நாள் என்கிறது இல்லை. இவைகள் பரபிரும்ம சம்பந்தமான யாகங்கள் எந்த நாளிலும் செய்யவேண்டும். அப்படிச்செய்வது நிரம்ப புண்ணியமே.

2. விதிப்படி நியமத்துடன் சுத்தனுயிருந்து ஒரு வருஷ காலம் தினந்தோறும் ஜபாதி யக்ஞங்களைச் செய்கிறவன் பால், தயிர், நெய், தேன் என்று சொல்லப்படும் தர்மம், அர்த்தம் காமம், மோக்ஷம் ஆகிய பலன்களை தேவர்கள், பித்ருக்கள் மூல மாய் அடைகிறுன்.

3. பிரம்மசாரி, காலை, மாலையின் ஸமித் ஹோமம், பிக்ஷை எடுத்து சாப்பிடுவது, தரையில் படுப்பது, குரு சுச்ரூஷை இவை களை வேதாத்யயனம் முடிந்து தன் வீடு திரும்பும் வரையில் செய்யவேண்டும்.

4. குரு புத்திரன், ஸேவகன், தனக்குத்தெரியாத விஷ யங்களை போதிப்பவன், தர்மானுஷ்டானமுள்ளவன், சுத்தன், பந்து, வித்தியாக் கிரஹண சக்தியுள்ளவன், பொருளுதவி செய்கிறவன், பொதுவாய் ஹிதம் செய்கிறவன், தன்னைச் சேர்ந் தவன் இந்த பத்து பேர்களுக்கும் அத்தியயனம் செய்விக்க லாம், அது தர்மமாகும்.

5. அன்னியன் அத்தியயன விஷயத்தில் செய்யும் பிழை களைக்கேட்டாலொழிய திருத்தக்கூடாது. தன் சிஷ்யனுக்கோ கேட்காவிட்டாலும் சொல்லவேண்டும். பக்தி ச்ரத்தையற்றவ னுக்கு கேட்டாலும் சொல்லக்கூடாது. புத்திமான் தகாதவன் விஷயத்தில் தனக்குத் தெரிந்தும் ஊமைபோல் இருக்க வேண்டும்.

6. மேற்சொல்லிய விதி தவறி சொன்னாலும், கேட்டா லும், தவறி நடப்பவன் இறப்பான். விசேஷ பகையையாவது அடைவான்,

7. ஊஷர பூமியில் நல்ல விதையைப்போடுவது தவறு, எந்த சிஷ்யனிடத்தில் தர்மார்த்தம், அவ்வித்தைக்குத்தக்க பணி விடை கூட இல்லையோ அச் சிஷ்யனுக்கு வித்யையை புகட்டு வது தவறு.

8. வேதம்சொல்லிவைப்பவர் ஊஷரபூமிபோன்ற அயோக்ய சிஷ்யனுக்கு பொருளாசையால் சொல்லிவைப்பதைவிட விருத்தி யன்னியில் கோரமான ஆபத்திற்கு உட்பட்டு ஒருவருக்கும் ஓதாமல் வேதத்தோடு மாணமடைவது நலம்.

9. வித்யைக்குரிய தேவதை வேதம் கற்பிப்பவர் ஒருவரி டம்வந்து "நான் தங்கள் பொருள், என்னைத் தாங்கள் ரக்ஷிக்க வேண்டும். அஸூயை முதலான தோஷமுள்ளவனுக்கு என்னை கொடுக்கக்கூடாது. அப்படி என்னைக் காப்பாற்றினால் என் சக்தி அதிகரித்து தங்களுக்கு விசேஷ பலனைக்கொடுப்பேன்"

10. "எந்த பிரம்மசாரி சுத்தன்நியமத்தோடு கூடியவன் பொருளை ரக்ஷிப்பதுபோல் என்னை ஜாக்கிரதையுடன் கேட்டு ரக்ஷிப்பன் என்று உமக்குத்தெரியுமோ அந்த பிராமணனுக்கு என்னைக்கொடும்'' என்று சொல்லிற்று.

R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

ச்வேதகேது.

1. கௌதமாது குலத்திலே உத்தாலகர் என்று ஒருவர் இருந்தார். இவர் குருகுலஞ்சென்று முறைப்படி கல்விகற்றவர். உத்தமகுணமுடையவர். அவருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதன்பெயர் ச்வேதகேது. இவரும் வயதுவந்தவுடன் தந்தை யைப்போல் கல்வியில் சிறந்தவர் ஆனார். மிகுந்த நல்லகுணமு டையவர் ஆனார். கல்வியினால் உண்டாகவேண்டியது என்ன?

2. அடக்கம் முதலிய நற்குணமல்லவா? ச்வேதகேதுவுக்கு ஆருணி என்று மற்றொரு பெயருமுண்டு. குருவுக்குதக்கபடி பணிவிடைசெய்தார். உத்தமன் எனப் பெயர்பெற்றார். இவருக்கு நசிகேதஸ் என்று ஓர் தம்பிஉண்டு. ஸுஜாதா என்று ஓர் தங்கையும் பிறந்தாள். ஸகோதரர்களுடன் இவர் அன்பாக வாழ்ந்தார்.

3 மூத்தபுதல்வராதலால் தந்தைதாய் பணிவிடையோடு வீட்டு வேலையையும் கவனித்துவந்தார். தன் ஸஹோதரியான ஸுஜாதையைக் ககோடரென்ற ரிஷிக்குக் கன்யாதானம் செய்து கொடுத்தார். ச்வேதகேதுவும் யாகம்செய்து பித்ரு கடனை நீக்கவும் ஸத்புத்திரனைப்பெற்று பித்ரு ரிணத்தை அகற்றவும் யோசித்தார். அதற்காக அல்லவோ விவாஹம் எற்பட்டது?

நற்குலத்தில் பிறந்து நல்லகுணமுள்ள கன்யகையை மணர்ந்தால்தான் குடும்பத்திற்கும் ஸுகம். பரலோகத்திற்கும் நன்மை. ச்வேதகேது, தேவலர் என்ற முனிவரது கன்யகையைக் கண்டார்- அவள் பெயர் ஸுவர்ச்சலா. அழகுநிறைந்தவள். அழகு மாத்ரமிருந்தால் போதுமா? குணமும் கல்வியும் வேண்டாமா? அதையும் பரீக்ஷித்தார்.

5. புருஷனுக்கு அவச்யம் வேண்டியதென்ன? என்று அவளுடன் வாதம்செய்தார். மோக்ஷமே முக்யமானது. அதற்காகத் தர்மம் செய்யவேண்டும், தர்மத்திற்கு விரோதமில்லாமல் பணத்தையும், காமத்தையும் அநுபவிக்கவேண்டுமென்றாள். இந்தபதில் மஹர்ஷிக்கு மகிழ்ச்சியைத் தந்தது. என் இதுதானே சாஸ்திரத்தின் கருத்து.

6. தனக்கு ஏற்றவள் என்று ஸுவர்ச்சலையை விதிப்படி விவாஹம்செய்துகொண்டார். இவரது கல்வியையும், குணத்தையுங் கண்டு அரசர்கள் அடிக்கடி இவரை அழைப்பர். தக்கபடி பூஜிப்பர். ஜநமேஜயராஜன் இவரைத் தன் ஸர்ப்ப யாகத்தில் ஸதஸ்யாக வரித்தான். ஸதஸ்யர் எல்லாமறிந்தவராய் இருக்க வேண்டும்.

7. மற்றோர் ஸமயம் தனது மருமானுன அஷ்டாவக்ரனுடன் ஜநகன் ஸபைக்குச் சென்றார். இப்படிப்பட்ட ச்வேதகேது தந்தைதாய்ப் பணிவிடை தவறுவதில்லை. ஒருநாள் இவர் பெற்

ரோருக்குப் பணிவிடைசெய்திருக்கும்போது ஒரு ரிஷிவந்தார். அவரை ச்வேதகேது தக்கபடி பூஜித்தார். வந்தவரும் ச்வேதகேதுவைக் கண்டு ஸந்தோஷமடைந்தார். அவனைக் கொண்டாடினார்.

8. இவனைப் பார்த்தவுடன், வந்த கிழ ப்ராம்மணருக்கு இவனைப்போல் தனக்கு ஒரு குழந்தை பிறக்காதா? என்று ஆசை உண்டானது. உத்தாலகரைப்பார்த்து உமது மனைவியைக் கொஞ்சம் என்னிடம் கொடும். ச்வேதனைப்போல் ஒரு குழந்தையைப் பெற்றுக்கொண்டு அவளை உம்மிடமே கொடுத்துவிடுகிறேன் என்றார். உத்தாலகர் இதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

9. வந்தவர் உத்தாலகர் மனைவியின் கைகளைப் பிடித்துக் கொண்டார். ச்வேதகேது, ஸ்வாமி தகாத கார்யத்தைச்செய்யாதீர்! என்றார், கிழவரோ, தகாததா இது? உலகில் பசு பக்ஷிகளைப் போல் மனிதரிலும் வேண்டியபோது எந்த ஸ்திரீயையாவது சேர்ந்து குழந்தையைப் பெறலாம். உத்தாகுரு என்ற இடத்தில் இன்றும் இந்தத் தர்மம் அநுஷ்டிக்கப்படுகிறது என்றார்.

10. ச்வேதகேது, மஹர்ஷே! என் தந்தை ப்ருஹ்மநிஷ்டர். ஆதலால் அவர் வாய்திறக்கவில்லை. என் தாயைப் பிறர் தொடுவது தர்மமல்ல. இனி எவரேனும் பிறர் மனைவியைத் தொட்டாலும், எந்தஸ்திரீயேனும் பரபுருஷனைத் தொட்டாலும் அது குழந்தையைக் கொன்ற பாபத்திற்கு ஸமமாகும் என்றார். அன்றுமுதல் மஹர்ஷிகள்கூட பிறர் மனைவியைத் தர்மத்திற்காக கூட கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா,

வாரவிருத்தாந்தம்.

இகழ்ச்சியடையார்:—மைசூரிலுள்ள பல ப்ரபலமானவர்கள் கையெழுத்திட்டு ஸர்வகலாசாலையார் ஸம்ஸ்க்ருத பாஷையைக்கட்டாயமாக போதிக்கும் முறையைக் கைவிடலாகாதென அதிகாரிகளுக்கு ஓர் மஹஜர் அனுப்பியிருக்கின்றனர். கலியினது வேகத்தால் தேவ வாணிக்கும் வேதகாவ்யங்களுக்கும் ஸதாசாரத்திற்

கும் மாலின்யம் ஏற்படுவது ஸஹஜமே. ஆயினும் அதை அகற்ற முயற்சிப்பது ஆஸ்திகர் கடமையாகும். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். இச்சாபாடமாகவே ஸபை ஏற்படுத்திய தாக அறிய வருந்துகிறோம்.

தீர்க்காயுர்பவ:—26௨ கோயம்புத்தூரில் ஜில்லா முனிஸீப் ஸ்ரீமான் கே. எஸ். கணேசய்யரவர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தை 16 காலக்ஷேபங்களாக செய்து பட்டாபிஷேகம் நடத்தினர். லௌகிகர்கள் மதவிஷயத்திலீடுபடுவது அவரது குடும்பத்திற்கும் உலகிற்கும் க்ஷேமத்தை அளிக்குமாதலால் இதை வரவேற்கிறோம். ஆனால் கேவல ஆட்டபாட்டங்களோடு நிறுத்தாமல் புராணங்களிலுள்ள தர்மத்தைக் கடைபிடித்து பிறருக்கும் போதிக்கும்படி வேண்டுகிறோம். ஸ்ரீமான் அய்யர் நீண்ட ஆயுள் பெற்று ஸதுபதேசம் செய்வாராக.

அன்னதானம்:—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தினத்தை முன்னிட்டு காவலியில் 1500 ஏழைகளுக்கு அன்னமளிக்கப் பட்டது. அன்னத்திற்கு பசியுள்ளவரே பாத்ரமாதலின் ஏழைகளுக்கு அன்னமளிப்பது சிறந்த தர்மமே. ஆனாலும் பூர்ண யோக்யதை உள்ள ஓர் அந்தணோத்தமன் குக்ஷியில் அன்னம் விழுந்தால் அது அநந்தமான பலனை அளிக்கும் என காலவிபரீதத்தால் அந்தணர் ஆராதனையை மறந்தோருக்கு நினைவூட்டுகிறோம்.

கைப்பற்றலாகாதா? 29௨ டில்லி சட்டசபையில் காலஞ்சென்ற கே. வி. ரங்கசாமி அய்யங்காரைப்பற்றி பலர் பேசினர். வைதிகம் சிறந்ததென இவர்கள் உணர்ந்ததைக்கண்டு சந்தோஷிக்கிறோம். இதை இவர்களும் கைப்பற்றும்படி வேண்டுகிறோம். ஓர் உத்தம மதாபிமானியை இழந்ததற்கு வருந்துகிறோம். மற்றுமோர் மதாபிமானி அவ்விடத்தைப் பூர்த்திசெய்வாராக.

ஸத்வித்யாலயம்:-26௨ சென்னைக்கடுத்த ஸைதாப்பேட்டையில் ஷை வித்யாசாலையின் நாலாமாண்டுவிழா ப்ரும்மஸ்ரீ டி. ஆர். ராமச்சந்த்ர அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஒரு நாள் உத்ஸாகமாகக்கூடி கலையவோ பேசவோ பலர்முன்வருவர். இச்சாலை ப்ரதிதினம் காலை 4½மணிக்கு மாணவர் வீடுதோறும் சென்று எழுப்பி கைங்கர்யம் புரிபவர்போல் பலர் கிடைப்பது

துர்லபம். இங்ஙனமே மற்ற சபைகளிலும் உழைப்பவர் உத் வியே மெச்சத்தக்கது.

மதாபிமானிகள்:—1௳ சென்னை மஹம்மதிய ஸமூகம் ஓர் கூட்டம்கூடி டில்லி மசூதியில் போலீசார் பூட்ஸுடன் சென்ற தையும் ப்ரார்த்தனை செய்வோரை அடித்ததையும் கண்டித்தது. பலர் மதாபிமானத்தால் மிக உக்ரமாகப்பேசினர். உயிரைவிட மதம் சிறந்ததென உத்கோஷித்தனர். நம்மவர் கவனிப்பரோ?

ஸதுபதேசம்:-1௳ சென்னை திலாஜிகல்ஹைஸ்கூலில் ஸ்ரீமான் டி. ஆர். ராமச்சந்த்ரய்யர் தலைமையில் ஸ்ரீமான் வி. கே. பாலசுப்ர மண்ய அய்யரவர்கள் கலாசாலையில் மதபோதனை என்பதைப் பற்றி ஓர் உபன்யாஸம் செய்தார். நம் மதத்திலுள்ள விசேஷங் களை விளக்கி வித்யை ஸத்யம் ராகம் த்யாகம் முதலியவைகளைப் பற்றியும்கூறி மதக்கல்வியே கற்கத்தக்க முக்ய கல்வி என்றார். கலாசாலையார் கவனிப்பார்?

மனிதச்சட்டமும்:—1௳ சென்னை ஹைகோர்ட்டில் தஞ்சை வரகூர் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோவிலில் பிராமணேதரர் கள் நுழைந்து ஸேவிக்க அதிகாரமில்லையென ஓர் ஐரோப்பிய நீதிபதியால்தீர்ப்புகூறப்பட்டது. சட்டம்இருவகை. தைவிகச்சட்ட மென்பது வேதத்தைத்தழுவிய ஸ்மிருதிகளாம். மனிதர் செய்த சட்டம் தலை ஓங்கி நம்மை ஆள்கிறது. அதுவும் தைவிகச்சட் டத்தை ஒட்டியதே. இரண்டும்சேர்ந்து வேதோக்தமாகப்ரதிஷ்டை செய்த ஆலயத்தில்மற்றவர் ப்ரவேசிக்கலாகாதெனகூறுகின்றன.

பிள்ளையாரையும் பிடித்ததா? 30௳ ஆமதாபாத்துக்கருகி லுள்ள காரெயில் என்ற ஊரிலுள்ள ஆலயம் அரசாங்கத்தால் அபஹரிக்கப்பட்டது. காங்கிரஸைச்சார்ந்தவர் இங்கு தங்கினர் என்றதே காரணம். காங்கிரஸ் தொண்டரென்போர் அதிலும் பெண்கள் தங்களால் தேசத்திற்கு உண்டாகும் நன்மையை விட தீமை அதிகமாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அரச மரத்தைப் பிடித்த பேய் பிள்ளையாரையும் பிடிக்கும்படி செய்யலா காது. அரசாங்கமும் ஆலயத்தில் புகலாகாது.

ஸ்ரீவத்ஸ வெ ஸோமதேவசர்மா.